**கவனிக்க.-** *2023.08.04 ஆந் திகதிய 2344 ஆம் இலக்க இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானியின் பகுதி IV (அ) பிரசுரிக்கப்படவில்லை.*


# ශ්‍රී ලංකා ප්‍රජාතාන්ත්‍රික සමාජවාදී ජනරජයේ ගැසට් පත්‍රය
# இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வர்த்தமானப் பத்திரிகை

අංක 2345 - 2023 අගෝස්තු මස 11 වැනි සිකුරාදා - 2023.08.11

*2345 ஆம் இலக்கம் - 2023 ஆம் ஆண்டு ஒகத்து மாதம் 11 ஆந் திகதி வெள்ளிக்கிழமை*

(அரசாங்கத்தின் அதிகாரத்துடன் பிரசுரிக்கப்பட்டது)


## பகுதி IV (ஆ) - உள்ளூராட்சி


| | பக்கம் |
|---|---|
| பதவிகள் - வெற்றிடம் | - |
| பரீட்சைகளும் பரீட்சைப் பெறுபேறுகளும் பிறவும் | - |
| கேள்விப்பத்திர அறிவித்தல்கள் | - |
| பொருட்கள் விற்பனையும் பிறவும் | - |
| உள்ளூராட்சி அறிவித்தல்கள் | 760 |
| துணைவிதிகள் | - |
| உள்ளூர் அதிகாரசபைகள் தேர்தல்கள் | - |
| கட்டளைச் சட்ட அறிவித்தல்கள் | - |
| வரவு செலவுத் திரட்டுகள் | - |
| வரவு செலவுக் கூற்றுகள் | - |
| ஆதன விற்பனைகள் | - |
| ஆயவிற்பனையும் குத்தகையும் | - |
| வீதிச் செயற்குழுவின் அறிவித்தல்கள் | - |
| நானாவித அறிவித்தல்கள் | - |


**வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிப்பதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளல் சம்பந்தமான**

### முக்கிய அறிவித்தல்கள்

இலங்கைச் சனநாயக சோசலிசக் குடியரசு வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளின் இறுதியில், ஒவ்வொரு மாதத்தின் முதல் வாரத்தின், வாராந்த வர்த்தமானப் பத்திரிகைகளில் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் திகதியும் நேரமும் சம்பந்தமான அறிவித்தல்களுக்கு கவனம் கோரப்படுகின்றது.

வாராந்த வர்த்தமானிகளிற் பிரசுரிக்கப்படுவதற்கான அறிவித்தல்கள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித் தினம் அவை **வர்த்தமானியில் பிரசுரமாகும் திகதிக்கு இரண்டு வாரங்களுக்கு முந்திய வெள்ளிக்கிழமை, நண்பகல் 12.00 மணியாகும்.** இறுதித் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்களான, பதவி-வெற்றிடங்கள் மற்றும் பரீட்சைகளுக்கு விண்ணப்பம் கோரும் அறிவித்தல்கள், கேள்விப்பத்திர அறிவித்தல்கள் அத்துடன் ஏல விற்பனைத் திகதியும் நேரமும் குறிப்பிடும் அறிவித்தல்கள் என்பன அவ்வவ் அறிவித்தல்களில் உள்ள விடயங்களில் அக்கறை செலுத்துவோர் ஆக்கபூர்வமாக பயனுறும் வகையில் அவை பிரசுரிக்கப்படுவதற்காக அரசாங்க அச்சகத்துக்கு அனுப்பிவைக்கப்படும் திகதியிலிருந்தும் அத்துடன் அவை பிரசுரமாகும் திகதியிலிருந்தும் போதிய கால அவகாசம் கொண்டதாக தயாரிக்கப்பட்டு அனுப்பிவைக்கப்பட வேண்டும் என சகல அரசாங்க திணைக்களங்கள், கூட்டுத்தாபனங்கள், சபைகள் ஆகியன அறிவுறுத்தப்படுகின்றன. அறிவித்தல்கள் தொடர்பிலான பிழைதிருத்தங்கள் சம்பந்தமாக செய்யப்படும் முறைப்பாடுகள் மற்றும் விசாரணைகள் என்பன வர்த்தமானியில் குறிப்பிட்ட அறிவித்தல்கள் பிரசுரமாகிய திகதியிலிருந்து மூன்று மாதங்கள் கழிந்த பின்னர் ஏற்றுக்கொள்ளப்படமாட்டா என்பதனை கவனத்திற்கொள்ளவும்.

வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரமாகும் சகல அறிவித்தல்களும், அவை பிரசுரமாகும் திகதிக்கு **இரண்டு வாரங்களுக்கு முன்னர்,** அதாவது 2023, செத்தெம்பர் மாதம் 01 ஆந் திகதி வெள்ளிக்கிழமை பிரசுரிக்கப்படவேண்டிய அறிவித்தல்கள் 2023, ஒகத்து மாதம் 18 ஆந் திகதி நண்பகல் 12.00 மணிக்கு அல்லது அதற்கு முன்னர் கிடைக்கக்கூடியவாறு தபால் மூலம் அல்லது நேரில் சேர்ப்பிக்கப்பட வேண்டும்.

**2006 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க, இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தின் 9 ஆம் பிரிவு**

"ஏதேனும் பிரகடனம், விதி, ஒழுங்கு விதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் வர்த்தமானியில் வெளியிடப்பட வேண்டுமென ஏதேனும் சட்டம் அல்லது சட்டவாக்கம் ஏற்பாடு செய்யுமிடத்து, அப்போது, அத்தகைய விதி, ஒழுங்குவிதி, கட்டளை, துணை விதி, அறிவிப்பு அல்லது வேறு விடயம் இலத்திரன் வடிவத்தில் வெளியிடப்படின், அத்தகைய தேவைப்பாடு திருப்திப்படுத்தப்பட்டுள்ளதாகக் கருதப்படுதல் வேண்டும்."

**கங்கானி லியனகே,**
*அரசாங்க அழுத்தகர்.*

*அரசாங்க அச்சுத் திணைக்களம்,*
*கொழும்பு 8,*
*2023 ஆம் ஆண்டு சனவரி மாதம் 02 ஆந் திகதி.*

*இவ்வர்த்தமானியை www.documents.gov.lk எனும் இணையத்தளத்திலிருந்து பதிவிறக்கம் செய்ய முடியும்.*

# உள்ளூராட்சி அறிவித்தல்கள்

**பேருவளை பிரதேச சபை**

பாதைகளுக்கு பெயர் சூட்டுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆவது பிரிவின் பிரகாரம் இந்தப் பிரதேச சபையின் மாலேவன்பத்த உப காரியாலய அதிகாரப் பிரிவுக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கு "படைவீரர் கோப்ரல் எம். வீ. அஜித் குமார மாவத்தை" என பெயர் சூட்டுவதற்காக பிரதேச சபையின் 2022.08.16 ஆந் திகதி நடைபெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தின் இலக்கம் ஈ.1.10 கொண்ட பிரேரணைக்கு மேல் மாகான கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது என்பதால் அந்தப் பாதை 2023.03.16 ஆந் திகதி தொடக்கம் " படைவீரர் கோப்ரல் எம். வீ. அஜித் குமார மாவத்தை" என பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.*

*அசோக்க ரணசிங்க,
பிதேச சபையின் செயலாளரும் பேருவளை
பிதேச சபையின் அதிகாரங்களை, வேலைகளை
மற்றும் கடமைகளை அமுல்படுத்தும்
அதிகாரியும்.*

*பிரதேச சபை அலுவலகம்,
பேருவளை,
2023, யூலை 24.*

***அட்டவணை***

| | | |
|---|---|---|
| *1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர்* | : | *பேருவளை பிரதேச சபை* |
| *2. மாவட்டம்* | : | *களுத்துறை* |
| *3. பிரதேச செயலாளர் பிரிவு* | : | *பேருவளை* |
| *4. வீதியின் தற்போதைய பெயர்* | : | *அலுத்கம - மத்துகம யடதொல வீதியில் ஆரம்பித்து புரேகாட வரை காணப்படும் பாதை.* |
| *5. பாதையின் ஆரம்பம்* | : | *அலுத்கம - மத்துகம யடதொல வீதியில்* |
| *6. பாதையின் முடிவு* | : | *புரேகொட வரை* |
| *7. புதிதாக இடப்பட்டுள்ள பெயர்* | : | *"படைவீரர் கோப்ரல் எம். வீ. அஜித் குமார மாவத்தை"* |

*08 - 173*

---

**பேருவளை பிரதேச சபை**

பாதைகளுக்கு பெயர் சூட்டுதல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 198 ஆவது பிரகாரம் இந்தப் பிரதேச சபையின் பயாகல உப காரியாலய அதிகாரப் பிரிவுக்குச் சொந்தமான கீழே அட்டவணையில் விவரிக்கப்பட்ட பாதைக்கு "பூஜ்ய தம்மரதன நாஹிமி மாவத்தை" எனப் பெயர் சூட்டுவதற்காக பிரதேச சபையின் 2022.03.15 ஆந்திகதி நடைெற்ற மாதாந்த சபைக் கூட்டத்தின் இலக்கம் ஈ.1.10 கொண்ட பிரேரணைக்கு மேல் மாகான கௌரவ ஆளுநரின் அங்கீகாரம் கிடைக்கப்பட்டுள்ளது எனபதால் அந்தப்*

பாதை 2023.04.06 ஆந் திகதி தொடக்கம் "பூஜ்ய தம்மரதன நாஹிமி மாவத்தை" எனப் பெயர் சூட்டப்பட்டுள்ளதாக இத்தால் அறியத்தருகின்றேன்.

அசோக்க ரணசிங்க,
பிதேச சபையின் செயலாளரும் பேருவளை
பிதேச சபையின் அதிகாரங்களை, வேலைகளை
மற்றும் கடமைகளை அமுல்படுத்தும்
அதிகாரியும்.

பிரதேச சபை அலுவலகம்,
பேருவளை,
2023, யூலை 24.

**அட்டவணை**

| | | |
|---|---|---|
| 1. உள்ளூராட்சி மன்றத்தின் பெயர் | : | பேருவளை பிரதேச சபை |
| 2. மாவட்டம் | : | களுத்துறை |
| 3. பிரதேச செயலாளர் பிரிவு | : | பேருவளை |
| 4. வீதியின் தற்போதைய பெயர் | : | காலி வீதி அம்பலப்பொல சந்தியில் இருந்து (புகையிதப் பாதைக்கு அருகில்) ரொக்லண்ட் வீதியுடன் இணையும் இடம் வரை காணப்படும் பாதை |
| 5. பாதையின் ஆரம்பம் | : | காலி வீதி அம்பலப்பொல சந்தியில் இருந்து (புகையிதப் பாதைக்கு அருகில்) |
| 6. பாதையின் முடிவு | : | ரொக்லண்ட வீதியுடன் இனணயும் இடம் வரை |
| 7. புதிதாக இடப்பட்டுள்ள பெயர் | : | " பூஜ்ய தம்மரதன நாஹிமி மாவத்தை" |

08 - 174

---

**மாத்தறை மாநகர சபை**

1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களின் உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டம்

இங்கு கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள நபர்கள் மூலம் அவர்களின் பெயர்களுக்கு எதிரே குறிப்பிடப்பட்டுள்ள சங்கங்களை, அதில் குறிப்படப்பட்டுள்ள இடங்களில் நடாத்திச் சொல்வதற்கு 2023 ஆம் ஆண்டிற்கான உறுதிப்பத்திரம் பெற்றுக்கொள்வதற்காக விண்ணப்பித்துள்ளார்கள் என்பதை 1975 ஆம் ஆண்டின் 17 ஆம் இலக்க சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்கும் சட்டத்தின் (06) ஆம் பிரிவின் "ஆ" அத்தியாயத்தின் கீழ் அறியத்தருகின்றேன்.

இந்த சங்கங்களுக்கு அருகாமையிலே, குறிப்பிடப்பட்ட இடங்களுக்கு எதிர்பார்க்கப்பட்ட இடங்களிலோ வதியும் ஒரு நபரினால் விளையாட்டு சங்கங்களுக்கான உறுதிப்பத்திரம் வழங்குவதற்கு மறுப்புக்கள் தெரிவிக்கப்படுமாயின் இந்த அறிவித்தல் கொடுக்கப்பட்டு வர்த்தமானியில் பிரசுரிக்கப்பட்டு 04 கிழமைக்குள் தகுந்த மறுப்புக் காரணங்கள் காட்டி எனக்கு எழுத்து மூலம் பிரதிகள் இரண்டு தரும்படி இத்துடன் அறியத்தருகிறேன்.

காஞ்சனா கே. தல்பாவிலா,
நகர ஆணையாளர்,
மாத்தறை மாநகர சபை.

மாநகர சபை அலுவலகம்,
மாத்தறை,
2023, யூலை 31.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | சங்கத் தலைவரா, முகாமையாளரா, செயலாளரா | சங்கத்தின் பெயர் | சங்கம் நடாத்தப்படும் இடம் |
|---|---|---|---|
| கே. டீ. ஸ்டெம்போ | செயலாளர் | ப்லுமூன் விளையாட்டு சங்கம் | இல. 241C, காலி வீதி, பபுரன |

08 - 266

---

**பாத்ததும்பர பிரதேச சபை**

*மாட்டிறைச்சி, ஆட்டிறைச்சி விற்பனைக் கடைகளை நடாத்துவதற்கான அனுமதிப்பத்திரம் வழங்குதல் - 2023*

ஊன் வினைஞர் கட்டளைச் சட்டத்தின் 272 ஆம் அத்தியாயத்தின் 7 (2) ஆம் பிரிவின்படி பின்வரும் அட்டவணையில் பெயர் குறிப்பிடப்பட்டுள்ளவர்கள் மாட்டிறைச்சி மற்றும் ஆட்டிறைச்சி விற்பனை நிலையங்களை நடாத்துவதற்கு 2023 ஆம் வருடத்திற்கான அனுமதிப்பத்திரம் வழங்குமாறு விண்ணப்பித்துள்ளனர் என்பது இத்தால் அறிவிக்கப்படுகின்றது.

பாத்ததும்பர பிரதேச சபையின் நிருவாக எல்லைக்குள் வதியும் எவரேனும் இதற்கான எதிர்ப்பைக் காட்ட விரும்பினால், அதன் காரணத்தைக் குறிப்பிட்டு இணைப் பிரதிகளில் இந்த அறிவித்தல் வர்த்தமானியில் வெளியிட்ட 14 (பதினான்கு) நாட்களுக்குள் அதனைப் பதிவுத் தபாலில் எனக்குக் கிடைக்கச் செய்தல் வேண்டுமென இத்தால் அறிவித்துக் கொள்கிறேன்.

இந்தக் கால எல்லைக்குள் இவ் அறிவித்தல் பற்றிய எதிர்ப்புக்கள் முன்வைக்கப்படவில்லையெனின் கீழ்வரும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளோருக்கு குறித்த வர்த்தக நிலையங்களில் உரிய வர்த்தகத்தைச் செய்து கொண்டு செல்ல 2023.09.01 முதல் 2023.12.31 வரை அனுமதிப்பத்திரம் வழங்கப்படுமென பொதுமக்களுக்கு தெரிவித்துக் கொள்வதற்காக இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.

பி.எச்.தர்மரத்ன,
செயலாளர்,
பாத்ததும்பர பிரதேச சபை.

பிரதேச சபை அலுவலகம்,
பாத்ததும்பர,
2023, யூலை 31.

**அட்டவணை**

| விண்ணப்பதாரியின் பெயர் | வர்த்தகம் செய்யும் இடம் | வர்த்தகத்தின் தன்மை |
|---|---|---|
| 4. திரு.ஏ.ஏ.எம். மசாஹிம் | 7/டீ/2,பொல்கொல்லை | ஆட்டிறைச்சிக் கடை |

08 - 267

**வவுனியா வடக்கு பிரதேச சபை**

வவுனியா வடக்கு பிரதேசசபை எல்லைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேசங்களை கட்டடமமைந்த இடப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்தல்


*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைச் சட்டத்தின் பிரிவு 134 (1) இன் பிரகாரம் வவுனியா வடக்கு பிரதேச சபை எல்லையினுள் அமைந்துள்ளதும் கீழ்க்காணும் அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ளதுமான கிராம அலுவலர் பிரிவுகளை கட்டடமமைந்த இடப் பிரதேசங்களாக பிரகடனப்படுத்துவதென 2022 ஆம் ஆண்டு ஒற்றோபர் மாதம் 26 ஆந் திகதிய* VNPS/2022/GM/10/55/19 *ஆம் இலக்க சபை தீர்மானத்தின் கீழ் வவுனியா வடக்கு பிரதேச சபையினால் தீர்மானிக்கப்பட்டுள்ளது.*

*கீழே அட்டவணையில் குறிப்பிடப்பட்டுள்ள கிராம அலுவலர் பிரிவுகளை வவுனியா வடக்கு பிரதேச சபையின் கட்டடமமைந்த பிரதேசங்கள் என 2023.08.03 ஆந் திகதியில் இருந்து செயற்படும் வண்ணம் மேற்படி சட்டத்தின் பிரகாரம் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட தத்துவங்களின் கீழ் வவுனியா நிர்வாக மாவட்டத்தின் பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் திரு. தெய்வேந்திரம் ரதீஸ்வரன் ஆகிய நான் அங்கீகாரம் வழங்கி இத்தால் வெளிப்படுத்துகின்றேன்.*

தெய்வேந்திரம் ரதீஸ்வரன்,
*பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.*

*பிராதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,*
*வவுனியா மாவட்டம்,*
*2023, ஒகத்து 03.*

வரைபடம்


MAP OF SELECTED GN DIVISION'S ASSESSMENT TAX IN
VAVUNIYA NORTH PRADESHIYA SABHA AREA.
TO MANKULAM ( A9 ROAD )
TO MULLAITHIVU
Legend
Railway
FROM VAVUNIYA
Data as at 2022

**அட்டவணை - 01**

**கட்டடமமைந்த இடப் பிரதேசங்களின் கிராம அலுவலர் பிரிவுகளும் கிராமங்களும்**

| இல. | வட்டாரத்தின் பெயரும் இலக்கமும் | கிராம அலுவலர் பிரிவுகள் | | கி. சே. பிரிவு இல. | பரப்பளவு ச. கி. மீ. | கி. சே. பிரிவுகள் உள்ளடக்கும் கிராமங்கள் |
|---|---|---|---|---|---|---|
| 1 | கனகராயன்குளம் வடக்கு மன்னகுளம் வட்டார இல. -01 | 01 | கனகராயன்குளம் வடக்கு | 225 A | 27.9 | 1. கனகராயன்குளம் வடக்கு<br>2. பெரியகுளம்<br>3. முதிரங்குளம்<br>4. குஞ்சுமுறியாக்குளம் |
| 2 | கனகராயன்குளம் தெற்கு வட்டார இல. - 02 | 01 | கனகராயன்குளம் தெற்கு | 225 | 20.5 | 1. கனகராயனகுளம் தெற்கு<br>2. குறிசுட்டகுளம்<br>3. புதுக்குளம்<br>4. ஆலங்குளம்<br>5. அம்பாள் நகர் |
| 3 | நெடுங்கேணி வட்டார இல. - 05 | 01 | நெடுங்கேணி தெற்கு | 222 | 8.3 | 1. சிவாநகர்<br>2. நெடுங்கேணி தெற்கு<br>3. சூடுவெந்தான்<br>4. இறம்பைக்குளம்<br>5. நெடுங்கேணி நகரம்<br>6. மருதங்குளம் |
| | | 02 | நெடுங்கேணி வடக்கு | 222 A | 1.9 | 1. நாவலர் வீதி<br>2. பெண்கள் விவசாயத் திட்டம்<br>3. சாண்டாகுளம்<br>4. 6 ஆம் கட்டை |
| 4 | புளியங்குளம் வடக்கு மற்றும் தெற்கு வட்டார இல. - 7 | 01 | புளியங்குளம் தெற்கு | 224 | 40.9 | 1. புளியங்குளம் தெற்கு<br>2. இராமர் பளியங்குளம்<br>3. கல்மடு<br>4. பழையவாடி |
| | | 02 | புளியங்குளம் வடக்கு | 224 A | 94.8 | 1. முத்துமாரி நகர்<br>2. பரசங்குளம்<br>3. புதூர் சந்தி<br>4. புதூர்<br>5. குருக்கள்குளம் |

தெய்வேந்திரம் ரதீஸ்வரன்,
பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர்.

பிராதிய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் அலுவலகம்,
வவுனியா மாவட்டம்,
2023, ஒகத்து 03.

08 - 425

**கோறளைப்பற்று பிரதேச சபை வாழைச்சேனை**

கோறளைப்பற்று பிரதேச சபைக்குட்பட்ட கீழ்க் குறிப்பிடப்படும் பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக பிரகடனப்படுத்தல்

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் உப பிரிவினால் பிரதேச சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் பயனைக் கொண்டு கோறளைப்பற்று பிரதே சபையினால் 2023 ஆம் ஆண்டின் மாச்சு மாதம் 08 ஆந் திகதிய பொதுக் கூட்டத்தில், தீர்மான இலக்கம் KPPS/ M.MEETING/60 - II/ MARCH/ 10/ 2023 இன் கீழ் சபையினால் நிறைவேற்றப்பட்ட பிரேரணைக்கு குறித்த சட்டத்தில் குறிப்பிடப்பட்ட பிரிவினால் உள்ளூராட்சி உதவி ஆணையாளருக்கு அளிக்கப்பட்ட தத்துவத்தின் கீழ் மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளர் சின்னராசா பிரகாஸ் ஆகிய நான், அங்கீகாரம் வழங்குவதனை இத்தால் பொதுமக்களுக்கு அறியத் தருகின்றேன்.*


*சின்னராசா பிரகாஸ்,*
*உள்ளூராட்சி உதவி ஆணையாளர்,*
*மட்டக்களப்பு நிர்வாக மாவட்டம்.*

**தீர்மானம்**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 134 ஆம் பிரிவின் (1) ஆம் பிரிவினால் பிரதே சபைக்கு அளிக்கப்பட்டுள்ள தத்துவத்தின் அடிப்படையில் கோறளைப் பற்று பிரதேச சபை அதிகாரப் பிரதேசத்தினுள் அமைந்துள்ள கீழே அட்டவணையில் கொடுக்கப்பட்ட பிரதேசங்களை அபிவிருத்தி அடைந்த பிரதேசங்களாக ஏற்றுக் கொள்ள வேண்டும் என்றும் அவ்வாறு ஏற்றுக் கொள்ளும் பிரேரணையினை சட்ட ரீதியாக நிறைவேற்றுவதற்கு மட்டக்களப்பு நிர்வாக மாவட்டத்தின் உள்ளூராட்சி உதவி ஆணையாளரின் அங்கீகாரத்தினை பெற்றுக் கொண்டு செயற்பட வேண்டுமொன்று கோறளைப்பற்று பற்று பிரதேச சபை தீர்மானிக்கின்றது.*

| *வட்டாரங்களின் பெயர்* | *கிராம அலுவலகர் பிரிவு* | *கிராம அலுவலகர் பிரிவு இலக்கம்* |
|---|---|---|
| வாழைச்சேனை முஸ்லிம் | வாழைச்சேனை 04 முஸ்லிம் | 206 |
| | வாழைச்சேனை முஸ்லிம் தெற்கு | 206D |
| பிறைந்துறைச் சேனை வடக்கு | பிறைந்துறைச்சேனை வடக்கு | 206A |
| | வாழைச்சேனை 05 முஸ்லிம் | 206B |
| வாழைச்சேனை தம்ழ் | வாழைச்சேனை தமிழ் | 205 |
| | புதுக்குடியிருப்பு | 205A |
| கல்குடா | கல்குடா | 204 |
| | பேத்தாளை | 205B |
| கல்மடு | கல்மடு | 204A |
| | கண்ணகிபுரம் | 205D |
| பிறைந்துறைச்சேனை தெற்கு | பிறைந்துறைச்சேனை தெற்கு | 206C |
| செம்மண் ஓடை | மாவடிச்சேனை | 208A |
| | செம்மண் ஓடை | 208D |

| வட்டாரங்களின் பெயர் | கிராம அலுவலகர் பிரிவு | கிராம அலுவலகர் பிரிவு இலக்கம் |
|---|---|---|
| கறுவாக்கேணி | மீராவோடை தமிழ் | 202 |
| | கறுவாக்கேணி | 202A |
| கிண்ணயடி | கிண்ணயடி | 202B |
| | சுங்கான்கேணி | 202C |
| | கும்புறுமூலை | 203B |
| கிரான் | கிரான் கிழக்கு | 203 |
| | கிரான் மேற்கு | 203A |
| சந்திவெளி | சந்திவெளி | 200 |
| | கோரகல்லிமடு | 203C |
| முறக்கொட்டாஞ்சேனை | முறக்கொட்டாஞ்வேனை | 199 |
| | தேவபுரம் | 199A |
| | பாலையடித் தோணா | 200B |


Ward Map of Koralai Pattu Pradeshiya Sabha - Batticaloa District
Scale - 1:190,000
Ref No : NDC / 15 / 05
Koralai Pattu Pradeshiya Sabha
Koralai Pattu Pradeshiya Sabha
WARD No WARD Name
1 Kudumbimalai
2 Koraveli
3 Valaichchenai Muslim
4 Braynthuraichenai North
5 Valaichchenai Tamil
6 Kalkudah
7 Kalmadu
8 Brainthuraichenai South
9 Semmannodai
10 Karuwakerni
11 Kinnayady
12 Kiran
13 Sandiveli
14 Morakottanchenai
Inset 1
GN No GN Name
206 - Valaichenai 4 Muslim
206A - Brainthuraichenai North
206B - Valaichenai 5 Muslim North
206C - Brainthuraichenai South
206D - Valaichenai 5 Muslim South
Legend
Province Boundary
District Boundary
DS Boundary
GN Boundary
Polling Division Boundary
PS Boundary
MC / UC Boundary
Ward Boundary
Multi Member Ward
Prepared by Survey Department of Sri Lanka
Data Source
National Delimitation Committee for Local Authorities - 2013
Ministry of Local Government and Provincial Councils
Inset 1 (Not to Scale)
Inset 2 (Not to Scale)
AMPARA DISTRICT
POLONNARUWA DISTRICT
Koralai Pattu West Pradeshiya Sabha
Eravur Pattu Pradeshiya Sabha
Sea
Lagoon

**காரைநகர் பிரதேச சபை**

*சக்கலாவோடையில் புதிதாக அமைக்கப்பட்ட மீன் சந்தையில் வியாபாரம் நடாத்துதல் - 2023*

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் பிரிவு 119 இன் கீழ் காரைநகர் பிரதேச சபைக்குள்ள அதிகாரத்தின் பிரகாரம் 2023.01.20 ஆம் திகதி சக்கலாவோடையில் திறந்து வைக்கப்பட்ட மீன் சந்தை நடாத்துவதற்கு 2023 ஓகத்து 03 ஆந் திகதிய 99 ஆம் இலக்க நிர்வாகக் கட்டளை மூலம் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்பதை இத்தால் அறிவிக்கின்றேன்.*

*கி. விஜயேஸ்வரன்,*
*செயலாளர்,*
*காரைநகர் பிரதேச சபை.*

*பிரதேச சபை அலுவலகம்,*
*காரைநகர்,*
*2023, ஓகத்து 03.*

**நிர்வாகக் கட்டளை இல. 99/03.08.2023**

*1987 ஆம் ஆண்டின் 15 ஆம் இலக்க பிரதேச சபைகள் சட்டத்தின் 119 ஆம் பிரிவின் கீழ் காரைநகர் பிரதேச சபைக்கு கையளிக்கப்பட்டுள்ள அதிகாரங்களுக்கு அமைவாக 2023.01.11 ஆந் திகதி நடைபெற்ற சபையின் ஐம்பத்து எட்டாவது சாதாரண பொதுக் கூட்ட தீர்மான இல. 789 இன் பிரகாரம் 2023.01.20 ஆந் திகதி முதல் சக்காலாவோடையில் புதிதாக அமைக்கப்பட்ட மீன் சந்தையில் வியாபாரம் நடாத்தப்பட வேண்டும் என தீர்மானம் நிறைவேற்றப்பட்டதற்கமைவாக குறித்த சந்தையை வர்த்தகமானியில் பிரசுரிப்பது எனவும் குறித்த சந்தையில் மீன் வியாபாரம் செய்ய விரும்பும் வியாபாரிகள் பிரதேச சபையில் அனுமதி பெற்று வியாபார நடவடிக்கைகளில் ஈடுபட வேண்டும் எனவும் தீர்மானிக்கின்றேன்.*

*08 - 558*

இலங்கை அரசாங்க அச்சுத் திணைக்களத்திற் பதிப்பிக்கப்பெற்றது.